2013 பிப்ரவரி 4] [பேரவைத் தலைவர்]

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (5-2-2013) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள் இயற்றியது குறித்து பள்ளிக் கல்வி (சி2) துறையின் 8-11-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 173-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 35/2009) 38(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு (கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதிமுறை) நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (இ2) துறையின் 31-7-2012 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 148-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு தலைவர் நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (இ2) துறையின் 19-6-2012 ஆம் நாளிட்ட அரசாணை (3டி) எண் 14-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2013 பிப்ரவரி 4

4. சிற்றுண்டிச்சாலைகள், உணவு விடுதிகள், மிட்டாய்க் கடைகள், கிளப்புகள், உணவு தருவிப்பவர்களால் மற்றும் பிற உண்டிச்சாலைகளால் மனைகளிலோ அல்லது வெளியிடங்களிலோ விற்பனை செய்யப்படும் சில பொருட்களின்மீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 9-3-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 32-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 15-5-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 64-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 18-6-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 83-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் 2-7-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 92-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 1-8-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 103-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, யாதொரு வணிகர், உயரழுத்த மின்மாற்றி நுகர்வோர்கள் ஜென்செட்டுகளில் பயன்படுத்தப்படும் எரி உலை எண்ணெய் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2013 பிப்ரவரி 4]

9. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 10-8-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 110-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 1957 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி (தமிழ்நாடு) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி1) துறையின் 1-6-2012 ஆம் நாளிட்ட 67 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2. 1957 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி (தமிழ்நாடு) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி1) துறையின் 10-8-2012 ஆம் நாளிட்ட 109 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

3. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஆறாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2013).

4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

5. 2013 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)